**தேதி** : 19 **ஏப்ரல்**, 2014

## பிரச்சார குறிப்புகள் - 19/04/2014

அருண் ஜெட்லி
(எதிர்க்கட்சித் தலைவர், மாநிலங்களவை)

பிரதமரின் பேச்சுக்கள்?

சமீபத்தில் வெளியான இரண்டு புத்தகங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக கடந்த 10 ஆண்டுகளில், 1200க்கும் மேற்பட்ட உரைகளைப் பிரதமர் நிகழ்த்தியுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெளிவுப்படுத்தியுள்ளது. பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கை "பேசாத" பிரதமர் என்று சொல்லும் குற்றச்சாட்டிற்கு இது பதிலளிக்கும் என்று பிரதமர் அலுவலகம் கருதுகிறது.

பிரதமர் என்பவர் நாட்டின் முக்கியமான அரசியல் அதிகாரி. அவர் இந்திய ஜனநாயகத்தின் முகம். அவரது கருத்து கொள்கையை வடிவமைக்கிறது. அவர் தலைமை பண்பை வழங்குகிறார். மக்கள் அவரிடம் தீர்வுகளை எதிர்பார்க்கிறார்கள். ஒரு பிரதமர் முக்கியம் குறைந்தவராக இருக்க முடியாது. மக்களின் நம்பிக்கையைத் தூண்டக்கூடியவராக இருக்க வேண்டும். தீர்வுகள் வழங்குவது பற்றி நம்பிக்கை அளிப்பவராக அவர் இருக்க வேண்டும். அவர் ஆளும் கூட்டணியின் அதிமுக்கியமான தலைவராக இருக்க வேண்டும். தார்மீக மற்றும் அரசியல் அதிகாரம் கொண்டவராக அவர் இருக்க வேண்டும்.

பிரதமர் என்பவர் தொடர்பு கொள்ளப்படக் கூடியவராக இருக்க வேண்டும். கவனத்துடன் கேட்பவராக இருக்க வேண்டும். அவர் தலைவராக இருக்க வேண்டும், வெறும் வாசகராக அல்ல. அதிபர் பராக் ஒபாமா, இந்தியாவுக்கு வந்திருந்த போது, நாடாளுமன்ற மைய மண்டபம் உட்பட பல்வேறு இடங்களில் அவர் உரை நிகழ்த்தினார். அவரை மரியாதை செய்யும் விதமாக குடியரசு தலைவர் அளித்த விருந்தில், அவரது உரைகளைத் தயாரிக்கும் முக்கிய வடிவமைப்பாளரை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவரது உரைகள் ஒவ்வொன்றும் ஒரு நிபுணரால் தயாரிக்கப்பட்டு, அதிகாரிகள் குழுவினராலும்

அதிபராலும் பரிசோதனை செய்யப்படும். பெரும்பாலான உரைகள் தகவல் உதவி கருவிகள் மூலமாகப் படிக்கப்படுகின்றன. தகவல் உதவி கருவிக்கு தெளிவான திரை இருக்கிறது. பார்வையாளர்களான நாம், அவற்றை தயார் செய்யப்படாத பேச்சுக்கள் என்று கருதுகிறோம். நாடாளுமன்ற மைய மண்டபத்தில் கூட இரண்டு கருவிகளின் உதவியுடன்தான் படித்தார்கள். இவரது சொற்கள் ஏற்படுத்திய தாக்கம் பெரிய அளவில் இருந்தது. இந்தியாவில் பிரதமரின் எழுதி வைக்கப்பட்ட பேச்சுக்களை மக்களால் கேட்கப்படுவது கூட இல்லை. நீண்ட காலத்திற்கு நினைவுகூரப்படவோ, கேட்கவோ முடிவதில்லை. புள்ளிவிவரப்படி பிரதமர் பேசினாலும் கூட, அவை கேட்கப்படுவதில்லை. பிரதமர் பனியில் நடந்தாலும், அவரது காலடி சுவடுகள் தெரிவதில்லை.

வால் ஸ்ட்ரீட் ஜர்னலை அலங்கரித்த திரு. வதேரா

திரு. ராபர்ட் வதேராவுக்கு வாழ்த்துக்கள். அவர் வால் ஸ்ட்ரீட் ஜர்னலை அலங்கரித்துள்ளார். வதேரா பாணி வியாபாரத்திற்கு முக்கிய வணிக விமர்சகரின் ஆராய்ச்சித் தாள்கள் தேவை.

எந்த முதலீடும் இல்லாமல் ஒரு முதலீட்டைத் துவக்க வேண்டும். அரசியல் பங்கின் பொருளாக கடன்களாகவும் முன்பணங்களாகவும் முதலீடு பாயும். இந்த கடன்களை பயன்படுத்தி சந்தை விலையைக் குறைத்து சொத்துக்களை வாங்க வேண்டும். அரசின் ஆதரவுடன் போதிய மதிப்புத் தொகை இன்றி சொத்துக்களை விற்கவும், நிலத்தையும் சொத்துக்களையும் வாங்கி குவிப்பதற்கும் ஏராளமான மக்கள் தயாராக இருக்கிறார்கள். சில சொத்துக்களை விற்றுவிட்டு உண்மையான கடன்களை அடைப்பார்கள். மீதி அனைத்தும் கடன்கள் இல்லாமல் உங்களுக்கே சொந்தமாகிவிடும். இதுவரை இத்தகைய வியாபார முறை புருவங்களை மட்டுமே உயர்த்தியது. கேள்விகள் கேட்பதற்கு இதுவே நேரம். இதைத்தான் வால் ஸ்ட்ரீட் ஜர்னல் செய்துள்ளது.

அமிர்தசரசில் பிஷன் பேடி

எனது நண்பரான பிஷண் பேடி நேற்று அமிர்தசரஸ் வந்திருந்தார். ஒரு மாற்றத்துடன் வருகை நிகழ்ந்துள்ளது. இந்திய வரலாற்றிலேயே மிகப்பெரிய அளவில் நேர்மையற்ற அரசைத் தந்த ஒரு அரசியல் கட்சிக்காக பிரச்சாரம் செய்வதற்கு அவர் வந்திருந்தார். ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு வேட்பாளருக்கு பிரச்சாரம் செய்ய வந்திருந்தார். ஒரு முறையற்ற காரணத்திற்காக போராடுபவர் என்றாலும் பிஷன் எப்போதும் போராட்டக்காரரே.

✲✲✲✲✲